## சீயர் நாயனார்
## வாழி திருநாமம்

சீராரும் வரமுனிவன் செழுங்குலத்தோன் வாழியே
சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தோன் வாழியே
பாராரும் எதிராசன் பதம் பணிவோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளை பகருமவன் வாழியே
ஆரம் சூழ் குருகை தனில் அவதரித்தோன் வாழியே
ஆழ்வார்கள் கலைப் பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
வரதகுரு கருணையினால் வாழ்வுடையோன் வாழியே
வான் சீர் நயினார் மலர்ப் பதங்கள் வாழியே

---